வார்த்தையோடு தரித்திருங்கள்! அதுதான் இன்று ஜீவக்கயிறாக உள்ளது. அங்கே ஆவிகள் எழும்பி வரும், சற்று கழிந்து அது ஏறத்தாழ எல்லாவற்றையும் வஞ்சித்துப்போடும்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும் (YOU MUST BE BORN AGAIN)

ஞாயிறு காலை, டிசம்பர் 31, 1961
பிரான்ஹாம் கூடாரம், ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

161. ஒருமுறை சாத்தான் மார்டினுக்குத் தோன்றினதாக அவர் கூறினார், மகத்தான பொற்கிரீடத்தைத் தரித்துக் கொண்டிருந்தான், அதில் இவ்விதமாக அழகாகச் செய்யப்பட்ட மூன்று அல்லது நான்கு நட்சத்திரங்கள்

இருந்தன, அது ஜொலித்துக் கொண்டும், அழகாகவும் இருந்தது, அவன் மகத்தான பெரிய ஆளாகவும், அருமையானவனாகவும், அழகானவனாகவும், சரியாகத் தலையைச் சீவிக் கொண்டிருந்தவனாகவும், சுத்தமாகவும், நேர்த்தியாகவும், மகத்தான அழகுடைய அங்கியை அணிந்தவனாகவும், அவனது கால்களில் அணிந்திருந்த அவனுடைய காலணிகள் பொன்னாகவும் இருக்க வெளியே நடந்து வந்து, “மார்டின், என்னை உனக்குத் தெரிகிறதா?” என்று கேட்டான்.

162. இப்பொழுது தரிசனங்களைக் காணாத ஜனங்கள், இது ஒருக்கால் இல்லாமல் இருக்கலாம் - இது

ஒருக்கால் இல்லாமல்... இருக்கலாம். நீங்கள் ஒருக்கால் அதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம், பாருங்கள், ஆனால் காரியங்கள் எப்படியாக வெவ்வேறு ஆவிகளில் உங்களிடம் வந்து, அவைகள் எப்படியாக வஞ்சித்துக் கொண்டிருக்கின்றன. கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் அவைகள் வஞ்சிக்கும் என்று வேதாகமம் கூறுகிறது, பாருங்கள். தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், முன்குறிக்கப்பட்டவர்கள், அந்த நோக்கத்திற்காகப் பிறந்தவர்கள். பாருங்கள்? பாருங்கள்?

163. எனவே அவன் இந்த தெரிந்து கொள்ளப்பட்ட வனிடம் வந்து, "மார்டின், என்னை உனக்குத்

தெரிகிறதா? நான் தான் கிறிஸ்து. என்னை அடையாளம் கண்டு கொள்வாயா?" என்றான். மார்டின் தயங்கினார். அது வினோதமாகத் தோன்றியது. அவர் ஒரு நிமிடம் காத்திருந்தார், அவன் மீண்டும் சொன்னான், அவன், "நீ என்னைக் காணவில்லையா? நான் தான் கிறிஸ்து. என்னை அடையாளம் தெரிகிறதா (recognize)?" என்றான். மூன்று நான்கு தடவைகள் அவன் அவ்வாறு அவரிடம் கூறினான்.

164. கிறிஸ்து சொன்னார், அல்லது மார்டின், "சாத்தானே, உன்னை எனக்குத் தெரியும். என்னுடைய ஆண்டவர் இன்னும் கிரீடம் தரிக்கவில்லை, ஆனால் அவருடைய பரிசுத்தவான்கள்

அவருக்கு கிரீடம் சூட்டுவார்கள்" என்றார். அங்கே பின்னால் வார்த்தை இருந்தது.

165. அங்கே தான் ரோம சபையானது அதிகமான மதக்கோட்பாட்டை பெற்றுக்கொண்டது, அசுத்த ஆவிகள் உள்ளே வந்து கொண்டிருக்கின்றன, அவைகள் வார்த்தைக்கு முரணாக உள்ளன, அவர்கள் தங்களுடைய மதக்கோட் பாட்டை ஏற்றுக்கொண்டு, வேதாகமத்திலிருந்து விலகிச் செல்ல வார்த்தையை மறுதலிக்க வேண்டியிருந்தது. வார்த்தையோடு தரித்திருங்கள்! அதுதான் இன்று ஜீவக்கயிறாக உள்ளது. அங்கே ஆவிகள் எழும்பி வரும், சற்று கழிந்து அது ஏறத்தாழ எல்லாவற்றையும்

வஞ்சித்துப் போடும். வேதாகமம் அவ்வாறு கூறுகிறது. "யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல, இம்மனிதர்கள் சத்தியத்தைக் குறித்த விஷயத்தில் நெறிகெட்ட சிந்தை (reprobated mind) உள்ளவர்களாய் இருப்பார்கள்," இவர்கள் அற்புதங்களையும் எல்லாவித அடையாளங்களையும் செய்கிறவர்கள். ஆனால் வார்த்தையோடு தரித்திருங்கள். கர்த்தருடைய வார்த்தை தீர்க்கதரிசியிடம் வந்து, அவர்கள் அதை உரைத்தார்கள், நாம் தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறோம்.

166. கவனியுங்கள், ஆமாம், அவர், "சாத்தானே, நான் உன்னை அறிவேன். என்னுடைய ஆண்டவர் இவ்விதமாக

ஒரு பெரிய மனிதராக இல்லை. என்னுடைய ஆண்டவர் கரடுமுரடான பழைய வஸ்திரத்தை அணிந்து கொண்டு, தம்முடைய கரத்தில் ஆணி கடாவப்பட்ட வடுக்களை உடையவராய், கிரீடம் தரிக்காதவராய் (uncrowned), இரத்தம் தோய்ந்த தலைமயிரை உடையவராய் தூரமாகப் போயிருக்கிறார். அவர் திரும்பி வரும்போது, அவர் அவ்விதமாகவே வருவார், அவர் எப்படி போனாரோ அந்தவிதமாகவே திரும்பி வருவார் என்று வேதாகமம் கூறுகிறது" என்றார். அப்போது அந்தக் காரியம் அவரை விட்டு மறைந்து போனது. ஓ, என்னே!

167. அவன் எப்படியாக உள்ளே வந்து, அதை அப்படியே மிக அழகாக ஆக்கி விடுகிறான், "ஓ, அவர்கள்

அந்நிய பாஷைகளில் பேசினார்களே. அவர்கள், அவர்கள், அவர்கள் நீ எப்போதும் கண்டதிலேயே மிகச்சிறந்த ஜனங்கள்" (என்பான்). நீங்கள் அதை நம்பி விடாதீர்கள். எச்சரிக்கையாக இருங்கள்.

